# சிலாங்கூர்

இன்று இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my  Media_Selangor  selangortv.my  MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / பிலவ ஆண்டு ஆடி மாதம் / ஜூலை 7/2021 JULY 7/2021


# பி40 தரப்பினர், மூத்த குடிமக்களுக்கு 500,000 தடுப்பூசிகள்

# சிலாங்கூர் அரசு இலவசமாக வழங்கும்

ஷா ஆலம் – மூத்த குடிமக்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு ஐந்து லட்சம் தடுப்பூசிகளை சிலாங்கூர் மாநில அரசு இலவசமாக வழங்கவுள்ளது.

செல்வேக்ஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில தடுப்பூசித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த சலுகையின் வழி 250,000 பேர் பயன் பெறுவர் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். மூத்த குடிமக்கள், குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் மற்றும் பெடுலி ராக்யாட் மக்கள் பரிவுத் திட்டத்தில் பங்கேற்றவர்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். இதரப் பிரிவினருக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து அவசியத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படும் என்று செல்வேக்ஸ் திட்டம் தொடர்பான சிறப்பு அறிவிப்பை இயங்கலை வாயிலாக வெளியிட்ட போது அவர் தெரிவித்தார். மாநிலத்தில் நோய்த் தொற்றை விரைந்து முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக சிலாங்கூர் அரசு சொந்தமாக தடுப்பூசியை வாங்கும் என்று மந்திரி புசார் கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் தேதி அறிவித்திருந்தார். சினோவேக் தடுப்பூசியின் மலேசியாவுக்கான ஏகபோக விநியோகிப்பாளரான பர்மாநியாகா நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பயனாக 25 லட்சம் தடுப்பூசிகள் தருவிக்கப்பட்டன. இதன் வழி 12 லட்சத்து 50 பேர் பயன்பெறுதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



## நோய்த் தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நீண்ட கால வளர்ச்சித் திட்டம்

ஷா ஆலம் – கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் நீண்ட கால பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை அடுத்தாண்டில் வரைய சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

வரும் 2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து உத்தேச செலவினங்களையும் மாநில அரசு ஆராய்ந்து வருவாகவும் இவ்வாண்டு இறுதியில் இதன் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் சிலாங்கூர் அரசு வருடாந்திர வரவு செலவுத் திட்டம் நீங்கலாக ஐந்து பொருளாதார மீட்சித் திட்டங்களை அறிவித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் சமீபத்தில் வெற்றியை நோக்கி இணைந்து செல்வோம் எனும் கருப்பொருளில் கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பை மாநில அரசு அறிவித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுமார் 5 கோடியே 51 லட்சத்து 56 ஆயிரம் வெள்ளி மதிப்பிலான இந்த உதவித் தொகுப்பின் வாயிலாக குறைந்தது 16 லட்சம் சிலாங்கூர்வாசிகள் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது.


சிலாங்கூர் சட்டமன்றக் கூட்டம் ஆகஸ்டு 23 தொடங்கி 9 நாட்கள் நடைபெறும்
பக்கம் 2

வசதி குறைந்தவர்களுக்கு உதவிக் கரம் நீட்டும் ஆலம் இம்பியான், ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்
பக்கம் 10

பள்ளிகளின் நிர்மாணிப்பு , சீரமைப்பு மானியங்கள் இந்திய குத்தகையார்களுக்கு என்பதை வரவேற்கிறோம்
பக்கம் 13

# ஜூலை மாதம் 40 லட்சம் தடுப்பூசிகளை சிலாங்கூர் பெறும்



ஷா ஆலம் - வரும் ஜூலை மாதம் 40 லட்சத்து 8 ஆயிரத்து 710 தடுப்பூசிகளை சிலாங்கூர் பெறும். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிலாங்கூர் அதிகமான தடுப்பூசிகளைப் பெறுவதாக சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

சி.ஐ.டி.எப். எனப்படும் கோவிட்-19 தடுப்பூசி நடவடிக்கை மன்றத்தின் கூட்டத்தில் தாம் கலந்து கொண்ட போது இந்த தகவல் தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

சி.ஐ.டி.எப். கூட்டத்தில் நேற்று காலை நான் கலந்து கொண்டேன். வரும் ஜூலை மாத ஒதுக்கீடாக 40 லட்சத்து 8 ஆயிரத்து 710 தடுப்பூசிகள் நமக்கு வழங்கப்படும் தகவல் இங்கு உறுதிப்படுத்தப்பட்டது. இது அதிகபட்ச எண்ணிக்கையாகும் என்றார் அவர்.

இதர மாநிலங்கள் பெறும் தடுப்பூசிகளின் எண்ணிக்கையையும் சித்தி மரியா தனது டிவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து கொண்டார். சரவா மாநிலம் 23 லட்சத்து 89 ஆயிரத்து 582 தடுப்பூசிகளையும் கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயா 16 லட்சத்து 14 ஆயிரத்து 421 தடுப்பூசிகளையும் பெறுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜோகூர் (950,618), நெகிரி செம்பிலான் (743,054), பேராக் (688,126), பினாங்கு (591,532), கெடா (519,868) ஆகிய மாநிலங்கள் அடுத்த நிலையில் உள்ளன.

# சிலாங்கூர் சட்டமன்றக் கூட்டம் ஆகஸ்டு 23 தொடங்கி 9 நாட்கள் நடைபெறும்



ஷா ஆலம் - மாட்சிமை தங்கிய மாமன்னர் மற்றும் மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஆகியோரிடமிருந்து ஒப்புதல் கிடைத்ததைத் தொடர்ந்து சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டம் வரும் ஆகஸ்டு மாதம் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது. இக்கூட்டத் தொடர் செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி வரை ஒன்பது நாட்களுக்கு நடைபெறும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிக்கை ஒன்றில் கூறினார். இந்த கூட்டம் வெறும் சிறப்பு கூட்டமாக அல்லாமல் கேள்வி, பதில் மற்றும் விவாத அங்கங்களை உள்ளடக்கிய வழக்கமான அமர்வாக இருக்கும் என்று அவர் சொன்னார். மாநிலத்தில் ஜனநாயக நடைமுறை தொடர்ந்து கட்டிக்காக்கப்படுவதை உறுதி செய்து வரும் மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் அவர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் குறிப்பிட்டார். இந்த கூட்டத் தொடரை வரும் ஆகஸ்டு மாதம் 23 ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக திறந்து வைக்க மாட்சிமை தங்கிய சுல்தான் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்த சிறப்பு நிகழ்வுக்குப் பின்னர் சட்டமன்றக் கூட்டம் எட்டு நாட்களுக்கு நடைபெறும் என்று அமிருடின் சொன்னார். இந்த கூட்டத் தொடரை நடத்துவதற்கான அனுமதிக் கடிதம் மாட்சிமை தங்கிய பேரரசரிடமிருந்து இம்மாதம் 6ஆம் தேதி கிடைக்கப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மக்கள் விரைவாக தடுப்பூசி பெறுவதை சிலாங்கூர் மாநில அரசின் தடுப்பூசித் திட்டம் உறுதி செய்யும்



ஷா ஆலம் — மாநில மக்கள் தடுப்பூசி பெறுவதை விரைவுபடுத்துவதற்காக சிலாங்கூர் மாநில தடுப்பூசித் திட்டம் (செல்வேக்ஸ்) தொடங்கப்பட்டுள்ளது.

நோய்த் தொற்றுக்கான சாத்தியம் உள்ளவர்களை இலக்காக கொண்டு செல்வேக்ஸ் கம்யூனிட்டி திட்டமும் தொழிலாளர்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரிஸ் திட்டமும் அமல் படுத்தப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சல்வேக்ஸ் கம்யூனிட்டி திட்டத்தின் வழி இன்னும் தடுப்பூசி பெறாத 250,000 சிலாங்கூர் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும். இத்திட்டம் 500,000 டோஸ் தடுப்பூசிகளை உள்ளடக்கியிருக்கும்.

செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரிஸ் ஒரு கட்டணத் திட்டமாகும். பத்து லட்சம் தொழிலாளர்களை இலக்காக கொண்ட இத்திட்டத்தில் முதலாளிகள் சுய விருப்பத்தின் பேரில் பங்கேற்கலாம் என்றார் அவர்.

சிலாங்கூர் மாநில மக்களில் 83.2 விழுக்காட்டினர் அதாவது 39 லட்சத்து 70 ஆயிரம் பேர் தடுப்பூசி பெறுவதற்கு பதிவு செய்துள்ளதாக இயங்கலை வாயிலாக வெளியிட்ட அறிவிப்பில் அவர் தெரிவித்தார்.

எனினும், நேற்று முன்தினம் வரை 851,118 பேர் மட்டுமே முதலாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுள்ள நிலையில் 270,221 பேர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் முழுமையாகப் பெற்றுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

போதுமான தடுப்பூசி இல்லாததே இந்த தாமதத்திற்கு காரணமாகும். இந்த தடுப்பூசி பற்றாக்குறைப் பிரச்னை சிலாங்கூர் மற்றும் மலேசியாவில் மட்டும் நிகழவில்லை. மாறாக, தென்கிழக்காசியா மற்றும் ஆப்பிரிக்காவிலும் இதே நிலை நீடிக்கிறது என்றார் அவர்.

# சிலாங்கூர் அரசின் இணைய சேவை சலுகைத் தொகைக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்



ஷா ஆலம் – சிலாங்கூரிலுள்ள எம்40 பிரிவைச் சேர்ந்த குடும்பத்தினர் சிலாங்கூர் அரசு வழங்கும் இணைய சேவை உதவித் தொகைக்கு இன்று முதல் விண்ணப்பம் செய்யலாம்.

எஸ்.ஐ.எஸ்.எம்.40 எனப்படும் நடுத்தர வருமானம் பெறுவோரை இலக்காக கொண்ட இத்திட்டதிற்கு http://www.sism40.com.my/. எனும் அகப்பக்கம் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம்.

குடும்ப பேக்கேஜ், தனிநபர் பேக்கேஜ் மற்றும் அடிப்படை பேக்கேஜ் ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் எட்டு தொகுப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் மாதம் 10 முதல் 30 வெள்ளி வரை ஓராண்டிற்கு கட்டணச் கழிவை பெற முடியும் என்று எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகம் கூறியது.

கூடுமான வரை அதிக எண்ணிக்கையிலானோர் இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவதை உறுதி செய்வதற்காக மாநில அரசு அனைத்து 56 சட்டமன்றத் தொகுதிகளுடனும் அணுக்கமாக செயலாற்றி வருகிறது என்று அது தெரிவித்தது.

கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கருத்தில் கொண்டு இந்த இணைய சேவைக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் எம்.பி.ஐ. மற்றும் டெலிகோம் மலேசியாவுடன் கூட்டாக மேற்கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

கடந்த மாதம் மந்திரி புசார் வெளியிட்ட கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பில் இந்த திட்டமும் இடம் பெற்றுள்ளது.

இது தவிர, சிறு வணிகர்கள், மாணவர்கள், தனித்து வாழும் தாய்மார்கள், டாக்சி ஓட்டுநர்கள் மூத்த குடிமக்கள் உள்பட 70,000 பேர் பயன்பெறக் கூடிய சிலாங்கூர் இணைய தரவு திட்டத்தையும் மந்திரி புசார் அறிவித்திருந்தார்.

# ஜூலை 26 ஆம் தேதி நாடாளுமன்றம் கூடுகிறது




கோலாலம்பூர் – இம்மாதம் 26ஆம் தேதி தொடங்கி ஐந்து நாட்களுக்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நடத்துவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 26ஆம் தேதி தொடங்கி நான்கு நாட்களுக்கும் பின்னர் ஆகஸ்டு 2 ஆம் தேதியும் இக்கூட்டம் நடைபெறும். அதே சமயம், மேலவைக் கூட்டத் தொடர் ஆகஸ்டு 3ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்களுக்கு நடைபெறும் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது.14 வது நாடாளுமன்றத்தின் மூன்றாம் தவணைக்கான சிறப்புக் கூட்டத் தொடரை நடத்துவதற்கான ஆலோசனையை மாட்சிமை தங்கிய மாமன்னருக்கு பிரதமர் வழங்குவார் என்று அந்த அறிக்கை தெரிவித்தது.தேசிய மீட்சித் திட்டம் தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விளக்கமளிப்பது, இயங்கலை மற்றும் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு என்ற கலவை முறையில் கூட்டத் தொடரை நடத்துவதற்கு ஏதுவாக சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை திருத்துவது ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் நாடாளுமன்றம் கூட்டப்படுவதாக அது கூறியது.

கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 150வது ஷரத்தின் (3) பிரிவின் அடிப்படையில் மாட்சிமை தங்கிய மாமன்னரின் அனைத்து அவசரகாலச் சட்டப் பிரகடனங்களும் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்படும்.

தேசிய பாதுகாப்பு மன்றம் மற்றும் சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ள நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளைப் (எஸ்.ஓ.பி.) பின்பற்றி இந்த கூட்டத் தொடர் நடத்தப்படும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொருளாதார மீட்சிக்கு சிலாங்கூர் அரசின் தடுப்பூசித் திட்டம் உதவும்



ஷா ஆலம் – தொழிற்சாலை ஊழியர்களை இலக்காக கொண்டு சிலாங்கூர் அரசு மேற்கொண்டு வரும் செல்வேக்ஸ் தடுப்பூசித் திட்டம் கடந்த ஓராண்டாக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த தடுப்பூசித் திட்டத்தின் வாயிலாக தொழிலாளர்கள் மத்தியில் நோய்த் தொற்றுக்கான அபாயம் குறையும் பட்சத்தில் மாநிலத்தின் பொருளாதாரம் மீட்சி காண்பதற்கான வாய்ப்பு உள்ளதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

தொழிலாளர்களின் ஒரு பகுதியினருக்கு தடுப்பூசி செலுத்தப்படும் பட்சத்தில் தொழில்துறைகள் முழு ஆற்றலுடன் செயல்படுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

சிலாங்கூர் அரசின் தடுப்பூசித் திட்டமான செல்வேஸ் முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக மலேசிய மலாய் வர்த்தக மற்றும் தொழில்முனைவோர் சங்கத்தின் தலைவர் அப்துல் ரஹிம் சஹாட் கூறினார்.

தங்கள் பொருள்கள் விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தில் பல தொழிற்சாலைகள் கையெழுத்திட்டுள்ளன. எனினும், பொது முடக்கம் காரணமாக முழு அளவில் செயல்பட முடியாத நிலையில் அவை உள்ளன என்றார் அவர்.

# சிலாங்கூரில் ஒருமைப்பாட்டை வளர்க்க பத்து லட்சம் வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் – சிலாங்கூரில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசு பத்து லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். எம்.பி.ஐ.எஸ். எனப்படும் சிலாங்கூர் மாநில ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க மன்றத்தின் உருவாக்கத்திற்காக விஷேசமாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அவர் சொன்னார்.

ஒற்றுமைத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் தலைமையில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். ஒருமைப்பாடு மீதான மாநில அரசின் கொள்கைகளை வகுக்கக்கூடிய சிந்தனை அமைப்பாக எம்.பி.ஐ.எஸ். விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த முயற்சிகள் மாநில பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தும். பொருளாதார ரீதியிலான வளர்ச்சியில் மட்டுமின்றி சுபிட்சம் மற்றும் உயரிய சமூக நெறியிலும் வெற்றி கண்ட மாநிலத்திற்கான எடுத்துக்காட்டாகவும் விளங்கும் என்றார் அவர்.

இயங்கலை வாயிலாக இந்த எம்.பி.ஐ.எஸ். திட்டத்தை தொடக்கி வைத்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சுமார் 35.4 லட்சம் மலாய்க்காரர்கள், 15 லட்சம் சீனர்கள், 757,000 இந்தியர்கள் மற்றும் 52,000 இதர இனத்தினரின் வசிப்பிடமாக விளங்குவதன் மூலம் தனித்துவமிக்க மாநிலமாக சிலாங்கூர் விளங்குவதாகவும் அவர் கூறினார்.

பல்லினை மக்கள் கொண்ட மாநிலம் என்ற இந்த சிறப்பம்சமே சில வேளைகளில் குழப்பங்கள் ஏற்படுவதற்கும் காரணமாகிவிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

# பூலாவ் இண்டாவிலுள்ள 400 மூத்த குடிமக்கள் பைசர் தடுப்பூசி பெற்றன



ஷா ஆலம் – பூலாவ் இண்டாவில் வசிக்கும் 400 மூத்த குடிமக்கள் நேற்று முதலாவது டோஸ் பைசர்–பயோஎன்டெக் தடுப்பூசியைப் பெற்றனர். அத்தீவிலுள்ள சுகாதார மையத்தில் அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்ற இந்த தடுப்பூசி இயக்கத்தில் அவர்கள் நேரம் தவறாமலும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டதாக கோலக்கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிசான் ஜமான் கூறினார்.

இந்த தடுப்பூசி இயக்கத்தில் கலந்து கொள்ள அவர்கள் காட்டிய உற்சாகம் எனக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சிலர் காலை 7.00 மணி முதல் தடுப்பூசி மையத்தின் வாசலில் காத்திருந்தனர் என்றார் அவர்.

பூலாவ் இண்டா மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தடுப்பூசி இயக்கம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் முழு ஈடுபாட்டுடன் தங்கள் பணியை ஆற்றிய அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

தடுப்பூசி பெறுவதற்கு தங்களைப் பதிந்து கொள்ளாதவர்கள் விரைந்து பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்ட அவர், பதிவு செய்தவர்கள் தங்களுக்கான தருணம் வரும் வரை பொறுமையுடன் காத்திருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

# கின்ராரா தொகுதியில் வீடு வீடாக உணவு விநியோகம் சட்டமன்ற உறுப்பினர் தகவல்



ஷா ஆலம் – வீடமைப்பு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று அடிப்படை உணவுப்பொருள்களை குடியிருப்பாளர்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யும் நடவடிக்கையில் கின்ராரா சட்டமன்றத் தொகுதி ஈடுபட்டுள்ளது. உணவுப் பற்றாக்குறைப் பிரச்னையை எதிர்நோக்கிய போதிலும் தயக்கம் மற்றும் வெட்கம் காரணமாக பலர் இத்தகைய உதவிகளை பெற விரும்பாததை கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இங் ஸ்வீ ஹான் கூறினார்.

நேற்று முன்தினம் நாங்கள் தொகுதியிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு மீன்களை விநியோகம் செய்தோம். வழக்கமாக, விண்ணப்பம் செய்வோருக்கு மட்டுமே உணவுக் கூடைகள் வழங்கப்படும். எனினும், உதவி பெற தயக்கம் காட்டுவோரும் நம்மிடையே உள்ளதை நாங்கள் உணர்ந்துள்ளோம். ஆகவே, நேரடியாக அவர்களை அணுக முடிவெடுத்துள்ளோம். இதன் மூலம் அவர்களின் மனக்குறைகளையும் கேட்டறிவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதோடு அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளையும் அடையாளம் காண இயலும் என்றார் அவர். தொகுதி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் வசதி குறைந்தவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஏழை மாணவர்களுக்கு பயன்படுத்தப்பட்ட கணினிகளை தந்து உதவுவீர்

ஷா ஆலம் – ஏழை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக பயன்படுத்தப்பட்ட மடிக்கணினிகள் மற்றும் கையடக்க கணினிகளை தந்து உதவுமாறு பந்திங் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். "ஒரு கணினி ஒரு நம்பிக்கை" எனும் இயக்கத்தின் வாயிலாக பயன்படுத்தப்பட்ட கணினிகளை சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் லாவ் வேங் சான் கூறினார். கணினி இல்லாத காரணத்தால் வீட்டிலிருந்து கல்வி கற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார். கோவிட்–19 நோய்த் தொற்று பரவல் காரணமாக மாணவர்கள் இயங்கலை வாயிலாக கல்வி கற்பது தற்போது புதிய இயல்பாகி விட்டது. வசதி குறைந்தவர்கள் குறிப்பாக பூர்வக் குடியினர் இந்த இந்த புதிய இயல்புக்கு தங்களை தயார் படுத்திக் கொள்வது சிரமமான ஒன்றாக உள்ளது என்றார் அவர். ஆகவே, செயல்படும் நிலையில் உள்ள மடிக்கணினிகள் மற்றும் கையடக்க கணினிகளை வைத்திருப்போர் அவற்றை கொடுத்து உதவும் பட்சத்தில் வசதி குறைந்த மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர்வதற்கு வாய்ப்பாக அமையும் என்று அவர் சொன்னார். இந்த இயக்கத்தின் வாயிலாக இதுவரை 12 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



கணினிகளை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் பந்திங்கில் உள்ள தொகுதி சேவை மையத்தை அல்லது 016–3221563 என்ற எண்களில் சட்டமன்ற உறுப்பினர் வேங் சானை தொடர்பு கொள்ளலாம்.

# தடுப்பூசியின் விற்பனை வழி சிலாங்கூர் லாபம் ஈட்டுகிறதா? மந்திரி புசார் மறுப்பு




ஷா ஆலம் — செல்வேக்ஸ் எனப்படும் சிலாங்கூர் அரசின் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் தொழில்துறையினருக்கு தடுப்பூசிகளை விற்பதன் மூலம் மாநில அரசு லாபம் சம்பாதிக்கிறது என்ற சில தரப்பினரின் குற்றச்சாட்டை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மறுத்துள்ளார்.

தொழில்துறையினருக்கு விற்கப்படும் தடுப்பூசியின் வழி கிடைக்கும் தொகை மாநில மக்களுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்துவதற்கு உண்டாகும் செலவை ஈடுகட்ட உதவுகிறது என்று அவர் சொன்னார். "தடுப்பூசி என்றால் தடுப்பூசி அடங்கிய புட்டிகளையும் அது வைக்கப்பட்டுள்ள அட்டைப் பெட்டிகளையும் மட்டும் பார்க்கலாகாது. மாறாக, தடுப்பூசி செலுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 5,000 பணியாளர்கள் மற்றும் தடுப்பூசி மையங்களை செயல்படுத்துவதற்கு ஆகும் செலவுகளையும் கணக்கில் கொள்ள வேண்டும்" என்றார் அவர். "நிர்வாக செலவினங்களுக்காக கணிசமானத் தொகையை நாங்கள் கூடுதலாக செலவிட வேண்டியுள்ளதால் தடுப்பூசி வழி லாபம் ஈட்டுகிறோம் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை" என்றும் அவர் தெளிவுபடுத்தினார். செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரி எனப்படும் தொழில்துறையினருக்கான தடுப்பூசித் திட்டத்தின் வழி வெளிநாட்டினர் உள்பட 20 லட்சம் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். பெரும்பாலான நோய்த் தொற்று மையங்கள் வேலையிடங்களை உட்படுத்தியுள்ளதால் அனைத்து மக்களையும் காப்பாற்றும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### சிலாங்கூர் அரசின் தடுப்பூசித் திட்டம் - தினசரி 600 பேருக்கு

## தடுப்பூசி செலுத்த கிளினிக் செல்கேர் நடவடிக்கை



ஷா ஆலம் - சிலாங்கூர் மாநில அரசின் கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 15 செல்கேர் கிளினிக்குகள் வாயிலாக தினசரி 600 பேருக்கு தடுப்பூசி செலுத்த முடியும் என கிளினிக் செல்கேர் நம்பிக்கை கொண்டுள்ளது. ஒவ்வொரு கிளினிக்கிலும் தினசரி 40 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்று கிளினிக் செல்கேர் நிர்வாகி முகமது நோர் முகமது நாசீர் கூறினார். கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக தேசிய பாதுகாப்பு மன்றம் நிர்ணயித்துள்ள எஸ்.ஓ.பி. விதிமுறைகளைப் பின்பற்றி முன்பதிவின் அடிப்படையில் தடுப்பூசி பெறுவோர் அழைக்கப்படுவார்கள் என்று அவர் சொன்னார். செல்கேர் கிளினிக்குகள் அளவில் சிறியவையாக உள்ளன. ஆகவே, தடுப்பூசி பெறுவோரின் எண்ணிக்கையை நாம் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இந்த திட்டம் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்ய 65 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றார் அவர். ஷா ஆலம், பூச்சோங், ஸ்கைபார்க் சுபாங், யு.எஸ்.ஜே. சென்ட்ரல், டேசா மெந்தாரி, செந்தோசா, புத்ரா ஜெயா ஆகிய இடங்களில் உள்ள செல்கேர் கிளினிக்குகள் தடுப்பூசி செலுத்தும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இது தவிர, கோலாலம்பூரில் மெனாரா வேர்ல்ட்வைட், மெனாரா யுபிஎன், மெனாரா ஹாப் செங், மெனாரா பங்குனான் ரோஹாஸ் பெர்காசா, மெனாதார ஒலிம்பியா, குயின்ஸ் அவென்யு செராஸ், கேஎல்ஒ ஸ்டேஷன், ஸ்ரீ ரம்பாய் ஆகிய இடங்களில் உள்ள செல்கேர் கிளினிக்குகளிலும் தடுப்பூசி செலுத்தப்படும். பொது மக்கள் எனும் https://selcareclinic.com/ அகப்பக்கம் வாயிலாக மேற்கண்ட செல்கேர் கிளினிக்குகளின் முழு முகவரியை பெறலாம்.

### 2019 ஆம் ஆண்டு முதல் நாட்டில் 1,708

## தற்கொலைச் சம்பவங்கள் பதிவு



ஷா ஆலம் — கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு மே மாதம் வரை நாட்டில் 1,708 தற்கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தற்கொலை செய்து கொண்டவர்களில் 1,427 பேர் பெண்களாவர் சொந்தமாக உயிரை மாய்த்துக் கொண்டவர்களில் அதிகமானோர் பதின்ம வயதினர் என்று புக்கிட் அமான் குற்றபுலனாய்வுத் துறை இயக்குநர் டத்தோஸ்ரீ அப்துல் ஜாலில் ஹசான் கூறினார். பதினைந்து முதல் 18 வயதுக்குட்பட்ட 872 பேரும் 19 முதல் 40 வயதுக்குட்பட்ட 668 பேரும் இக்காலக்கட்டத்தில் தற்கொலை செய்து கொண்டதாக அவர் சொன்னார். கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஜொகூரில் மிக அதிகமாக அதாவது 101 பேர் தற்கொலை செய்து கொண்ட வேளையில் சிலாங்கூரில் இவ்வாண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை 117 பேர் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு மே மாதம் வரை நாளொன்றுக்கு சராசரி இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதை இந்த எண்ணிக்கை காட்டுகிறது என்றார் அவர். குடும்ப பிரச்னை, மனஉளைச்சல் மற்றும் நிதி பிரச்னை ஆகிய மூன்று காரணங்களால் அதிக தற்கொலைகள் நிகழ்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நோய்த் தொற்று அதிகரிப்பு- ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதியில் மீண்டும் கோவிட்-19
# பரிசோதனை நடத்த வலியுறுத்து



ஷா ஆலம் – ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதியில் நோய்ப் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு அங்கு மிகப்பெரிய அளவில் கோவிட்-19 பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மரணச் சம்பவங்கள் உள்பட நோய்த் தொற்றினால் கடுமையான பாதிப்புகள் ஏற்படுவதை தவிர்க்க நோய்க்கான அறிகுறிகளைக் கொண்டவர்களை முன்கூட்டியே அடையாளம் காண்பதற்காக இச்சோதனை இயக்கம் நடத்தப்படுவது அவசியம் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இயான் யோங் ஹியான் வா கூறினார். நோய்த் தொற்று பீடிக்கப்பட்டவர்கள் தொடர்பில் எனது அலுவலகம் தினமும் தகவல்களைப் பெற்று வருகிறது. சுகாதார அமைச்சு ஆக்ககரமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை மேலும் விபரீதமாகிவிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது என்றார் அவர். இந்த நோய்த் தொற்று பரவத் தொடங்கிய இந்த ஓராண்டு காலத்தில ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதியைச் சேர்ந்த சுமார் 40 பேர் செர்டாங் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதியில் நோய்ப் பரவல் அதிகமானதைத் தொடர்ந்து அத்தொகுதி தனது சொந்த முயற்சியில் கடந்த 25ஆம் தேதி பாதிக்கப்பட்ட பகுதிகளை இலக்காக கொண்டு கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தை நடத்தியது.

## மெந்தாரி கோர்ட் குடியிருப்பில் 500
# கோவிட்- 19 சம்பவங்கள்



பெட்டாலிங் ஜெயா— இங்குள்ள மெந்தாரி கோர்ட் அடுக்குமாடி குடியிருப்பில் 500 பேருக்கு கோவிட்-19 நோய்த் தொற்று பீடித்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இங்கு தங்கியிருக்கும் தொழிற்சாலை ஊழியர்கள் மூலம் இந்நோய்த் தொற்று பரவியுள்ளது.

கடந்த அறுபது நாட்களில் இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளதை சுகாதார அமைச்சின் ஆவணங்கள் காட்டுகின்றன. இதன் காரணமாவே, நேற்று முன்தினம் தொடங்கி 14 நாட்களுக்கு அந்த குடியிருப்பு பகுதியில் கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல் செய்யப்பட்டுள்ளது. அந்த குடியிருப்பு பகுதியிலுள்ள 3,500 வீடுகளில் வசிக்கும் உள்நாட்டினர் மற்றும் அந்நிய பிரஜைகளை உள்ளடக்கிய 17,000 பேரை இந்த நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை உள்ளடக்கியுள்ளதாக பெட்டாலிங் மாவட்ட அதிகாரி டத்தோ ஜொஹாரி அனுவார் கூறினார்.

நோய்த் தொற்று தொடர்ந்து பரவுவதை தடுப்பதற்காக அப்பகுதிக்குள் நுழையவும் வெளியேறவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள கடைகளில் பொருள்கள் வாங்க வீட்டிற்கு ஒருவர் மட்டுமே அனுதிக்கப்படுவார் என்றார் அவர்.

மேலும், கடுமையாகக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்ட பகுதியில் தடுப்பூசி பெறும் முதல் குழுவினராக இக்குடியிருப்பாளர்கள் விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். அப்பகுதியில் வசிக்கும் அனைவருக்கும் கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் வரும் ஞாயிற்றுக் கிழமை தடுப்பூசி செலுத்தப் படவுள்ளது.

## பொதுமுடக்க காலத்தில் வியாபாரம்
# செய்ய தற்காலிக லைசென்ஸ்

ஷா ஆலம் – கோவிட்-19 நோய்ப் பரவல் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டு சிறிய அளவில் வியாபாரம் செய்ய விரும்புவோர் ஊராட்சி மன்றங்களிடம் தற்காலிக லைசென்ஸ் பெற விண்ணப்பிக்கலாம்.

வர்த்தக நடவடிக்கையை எளிதாக்கவும் போக்குவரத்துக்கு இடையூறின்றி பாதுகாப்பான இடத்தில் வர்த்தகம் புரிவதை ஊக்குவிக்கவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். மூன்றாம் கட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை நீட்டிக்கப்பட்டுள்ளதால் அங்காடி வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். இந்த பெருந்தொற்று காரணமாக மக்களின் வாழ்க்கை பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. தங்கள் வாழ்க்கையைத் தொடர்வதற்கு அவர்கள் சிறு அளவிலான வர்த்தகத்தை தேர்தெடுக்கின்றனர் என்றார் அவர். இது போன்ற சூழ்நிலையில் அத்தகையத் தரப்பினர் தற்காலிக வர்த்தக லைசென்சுக்கு விண்ணப்பம் செய்வதை நாங்கள் ஊக்குவிக்கிறோம். மக்கள் வருமானம் ஈட்டுவதற்கு தேவையான உதவிகளை வழங்க சிலாங்கூர் அரசாங்கம் எப்போதும் தயாராக உள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும்படி அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி உத்தரவிட்டிருந்தார்.



# சிலாங்கூரில் நூற்றுக்கணக்கான சட்டவிரோத தொழிற்சாலைகள் அகற்றப்படும்



ஷா ஆலம் – சிலாங்கூரில் செயல்படும் நூற்றுக்கணக்கான சட்டவிரோத தொழிற்சாலைகளுக்கு எதிராக மாநில அரசு கட்டங் கட்டமாக நடவடிக்கை எடுக்கும்.

அந்த தொழிற்சாலைகள் மீது ஊராட்சி மன்றங்களின் வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிக்கை ஒன்றில் கூறினார்.

ஊராட்சி மன்ற நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சட்டவிரோத தொழிற்சாலைகளின் பட்டியலையும் அவர் வெளியிட்டுள்ளார். அவை பின்வருமாறு–

**செலாயாங் நகராண்மைக் கழகம்**
– *75 தொழிற்சாலைகள்*

**கோல லங்காட் நகராண்மைக் கழகம்**
– *27 தொழிற்சாலைகள்*

**சுபாங் ஜெயா மாநகர் மன்றம்**
– *23 தொழிற்சாலைகள்*

**கோல சிலாங்கூர் மாவட்ட மன்றம்**
– *14 தொழிற்சாலைகள்*

**உலு சிலாங்கூர் மாவட்ட மன்றம்**
– *7 தொழிற்சாலைகள்*

**சிப்பாங் நகராண்மைக் கழகம்**
– *2 தொழிற்சலைகள்*

சட்டவிரோத தொழிற்சாலைகளை சட்டப்பூர்வமாக்கும் திட்டத்தை மாநில அரசு கடந்த 2008ஆம் ஆண்டில் அமல்படுத்தியது.

## மூன்றாம் கட்ட கோவிட்-19 பரிசோதனை- 8 தொகுதிகளில் 5 விழுக்காட்டிற்கும் மேல் நோய்த் தொற்று பதிவு



ஷா ஆலம் – அண்மையில் மூன்றாம் கட்ட இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் ஐந்து விழுக்காட்டிற்கும் மேல் நோய்த் தொற்று பதிவாகியுள்ளதாக நம்பப்படுகிறது.

ஸ்ரீ செத்தியா தொகுதியில் 5.76 விழுக்காடும் சுங்கை துவா, கோம்பாக் செத்தியா, தாமான் டெம்ப்ளர் தொகுதிகளில் 8.57 விழுக்காடும் உலு கிளாங் மற்றும் புக்கிட் அந்தாராபங்சா தொகுதிகளில் 11.51 விழுக்காடும் நோய்த் தொற்று பதிவாகியுள்ளது.

இத்தொகுதிகளில் மொத்தம் 5,582 பேருக்கு கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட வேளையில் அவர்களில் 446 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதாக கிளினிக் செல்கேர் நிர்வாகி முகமது நோர் முகமது நாசீர் கூறினார்.

இந்த தரவுகளின் அடிப்படையில் அதிக நோய்த் தொற்று பதிவான இடங்களை இலக்காக கொண்டு மறுபடியும் பரிசோதனை இயக்கம் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கையில் அந்த எட்டு தொகுதிகள் மட்டுமல்லாது அதிக சம்பவங்கள் பதிவாகும் அனைத்து இடங்களும் கவனத்தில் கொள்ளப்படும் என்றார் அவர்.

மூன்றாம் கட்ட கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தை மேற்கொள்வதற்காக மாநில அரசு கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பின் கீழ் 1 கோடியே 70 ஆயிரம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கு கொண்டனர்.

## மெந்தாரி கோர்ட் குடியிருப்பாளர்களுக்கு பி.கே.பி.எஸ். 3,500 உணவுப் பொட்டலங்கள் வழங்கியது



ஷா ஆலம் – கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை விதிக்கப்பட்ட பெட்டாலிங் ஜெயா, பிஜேஎஸ் 8இல் உள்ள மெந்தாரி கோர்ட் அடுக்குமாடி குயிருப்பில் வசிப்பவர்களுக்கு சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் உணவுப் பொருள்களை வழங்கியது.

அரிசி, மாவு, சீனி, சார்டின், சமையல் எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அடங்கிய 3,500 உணவுப் பொட்டலங்கள் அப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாக அதன் தலைமை செயல் முறை அதிகாரி டத்தோ அப்துல் காரிப் ரமின் கூறினார்.

இந்த உணவுப் பொருள்கள் கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்ட இரண்டு வார காலத்திற்கு போதுமானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

நோய்த் தொற்று அதிகரித்த காரணத்தால் மெந்தாரி கோர்ட் குடியிருப்பு பகுதியில் இரு வாரங்களுக்கு கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள சுமார் 3,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடுமையாகக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான எங்களின் இரண்டாவது உதவித் திட்டம் இதுவாகும்.

கடந்த மாதம் கூடுதல் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல் செய்யப்பட்ட சபாக் பெர்ணம் மாவட்டத்தின் தாமான் பெர்த்தாமா, தாமான் செரெண்டா, தாமான் பிரிமா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு இத்தகைய உதவிகளை வழங்கினோம் என்றார் அவர்.

மாநில அரசின் உத்தரவைப் பொறுத்து நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட இதர இடங்களிலும் இத்தகைய உதவிகளை வழங்க தாங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்ற வரை உதவி வழங்க தாங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No. 1, Jalan Indah 14/ 8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# செயல்பாடுகள் SELVAX

## சிலாங்கூர் மாநில அளவில் அதிக மக்கள் பயனடைய வடிவமைக்கப்பட்டது. மக்கள் விரைவில் நோய் எதிர்ப்பு சக்தி அடைவதை உறுதிப்படுத்துவது.

செல்வெக்ஸ் சமூக தடுப்பூசி 500,000 டோஸ் சிலாங்கூர் மக்களுக்கு இலவசம்

செல்வெக்ஸ் தொழிற்துறை தடுப்பூசி இது பொருளாதாரம் மற்றும் தொழிற்துறைகள் தொடர்ந்து செல்ல வேலை வாய்ப்புகளை தொடர்ந்து பேணுவதையும் உறுதி செய்வதாகும்

சிலாங்கூர் தடுப்பூசிகள் தனிநபர்களுக்கு விற்கப்படுவதில்லை. “வாக் இன்” அனுமதிக்கப்படவில்லை. செலவு உத்தரவாதத்தை தொழிலாளர்கள் ஏற்க மாட்டார்கள்

டிஜிட்டல் சான்றிதழின் நோக்கத்திற்காக சிலாங்கூர் தடுப்பூசி (செல்வாக்ஸ்) பெறுபவர்களின் பதிவுகள் மலேசிய சுகாதார அமைச்சகத்துடன் ஒருங்கிணைக்கப்படும்

“

இத்திட்டத்தின் நோக்கம் மத்திய அரசிடமிருந்து தடுப்பூசிகளை பெறுவதைவிட, ‘மந்தை நோய் எதிர்ப்பு சக்தியை’ துரிதப்படுத்துவதற்காக சப்ளையர்களிடமிருந்து நமது சொந்த தடுப்பூசிகளை வாங்குவதற்கான மாநில அரசின் முயற்சியாகும்.

சிலாங்கூர் மாநிலத்தின் மொத்தம் 250,000 குடிமக்கள் இந்த தடுப்பூசியை மாநில அரசிடமிருந்து இலவசமாக பெறும் திட்டம்.



டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி
டத்தோ’ மந்திரி புசார்

### செல்வெக்ஸ் சமூக தடுப்பூசி திட்டம்

- 500,000 டோஸ் மருந்தளவு 250000 சிலாங்கூர் வாசிகள் இலவசமாகப் பெறுவார்கள்.
- சிலாங்கூர் தடுப்பூசிகள் தனிநபர்களுக்கு விற்கப்படுவதில்லை.
- “வாக் இன்” அனுமதிக்கப்படவில்லை

ஈடுபட்டுள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



டாக்டர் சித்தி மரியா மாமுட்



புர்ஹான் அமான் ஷா



இங் ஸீ ஹான்

**இலக்கு**

180000 டோஸ் மருந்தளவை சிலாங்கூர் மக்களுக்கு ஜூலை மாத இறுதிக்குள் விநியோகிப்பது.

### செல்வெக்ஸ் தொழிற்துறை தடுப்பூசி

- 20 லட்சம் டோஸ் பொருளாதாரம் மற்றும் தொழிற்துறை முன்களப் பணியாளர்களுக்கு
- செல்வெக்ஸ் தொழிற்துறை தடுப்பூசி இது பொருளாதாரம் மற்றும் தொழிற்துறைகள் தொடர்ந்து செல்ல வேலை வாய்ப்புகளை தொடர்ந்து பேணுவதையும் உறுதி செய்வதாகும்
- சிலாங்கூர் தடுப்பூசிகள் தனிநபர்களுக்கு விற்கப்படுவதில்லை.
- “வாக் இன்” அனுமதிக்கப்படவில்லை.
- செலவு உத்தரவாதத்தை தொழிலாளர்கள் ஏற்க மாட்டார்கள்

ஈடுபட்டுள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



டத்தோ தெங் சாங் கிம்



ரோட்சியா இஸ்மாயில்

## கோவிட் 19 தடுப்பூசி பெறுதல்

**11 ஜனவரி**

தடுப்பூசி கொள்முதல் அறிவிப்பு

**24 பிப்ரவரி**

- தடுப்பூசி திட்டத்தை முன்னெடுக்க செல்கேட் ஹெல்த்கேர் நியமிக்கப்பட்டது
- பார்மானியாகா பெர்ஹாட் மற்றும் செல்கேட் ஹெல்த்கேர் இடையே வழங்கல் மற்றும் விநியோகம் (எஸ்.டி.ஏ)
- 1.25 மில்லியன் பெறுநர்களுக்கு ஆர்டர் செய்யப்பட்ட 2.5 மில்லியன் டோஸ்

## தடுப்பூசி விநியோக அட்டவணை

**இலக்கு**
ஒரு நாளைக்கு 43,500 டோஸ் தடுப்பூசி கூடுதல் திறன்

**நிர்ணயிக்கப்பட்ட இடம்**
26 (தடுப்பூசி மையம்) பிபிவி, கம்யூனிட்டி ஹால், மொபைல் பிபிவி, கிளினிக்குகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள்

**அடைவு**
எதிர்பார்க்கும் காலத்திற்கு ஏற்ப அக்டோபருக்குள் 80 விழுக்காடு சிலாங்கூர் மக்கள் தடுப்பூசி பெறுவது.

## சிலாங்கூர் தடுப்பூசி திட்டம் குறித்த அண்மைய தகவல்கள்

**சிலாங்கூர் தடுப்பூசி திட்டம்**

- 5 பெரிய தடுப்பூசி மையம்
- டொரோப்பிகானா கார்டன் மோல் கோத்தா டாமன்சாரா
- ஈவோ மோல், பாங்கி
- விளையாட்டு வளாகம், கிளானா ஜெய,
- டி பால்மா ஹோட்டல், ஷா ஆலம்
- 6 பிபிவி கம்யூனிட்டி ஹால்
- 5 செல்கேர் கிளினிக்
- 5,000 மருத்துவ மற்றும் உதவி பணியாளர்கள்
- 1,228 பேனல் கிளினிக்குகள்

சிலாங்கூர் தடுப்பூசி பெறுநர் பதிவுகள் (செல்வாக்ஸ்) சுகாதார மலேசியா அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்படும் ‘டிஜிட்டல் சான்றிதழ்’ நோக்கம் தொடர்பான மேல் விவரங்களுக்கும் மற்றும் விஷயங்களுக்கு தயவுசெய்து (ஹாட்லைன்) தொடர்பு கொள்ளவும் பின்வரும் தளங்களை பார்வையிடவும்:

https://vax.selangkah.my

ஹாட்லைன் - 1-800-22-6600 @selangorVAX

# வசதி குறைந்தவர்களுக்கு உதவிக் கரம் நீட்டும்

# ஆலம் இம்பியான் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயம்



கடந்த ஓராண்டு காலமாக நாட்டை உலுக்கி வரும் கோவிட்-19 பெருந்தொற்று சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையை நிர்மூலமாக்கி விட்டது. குறிப்பாக, ஏழைகளின் நிலை வெள்ளைக் கொடி ஏற்றும் அளவுக்கு வறுமையின் உச்சத்தை எட்டி விட்டது. இத்தகைய தரப்பினருக்கு வேண்டிய பொறுப்பு சமூக, சமய அமைப்புகளுக்கும் உள்ளது. அப்பொறுப்பை முடிந்த அளவு சிறப்பாக ஆற்றி வருகிறது ஷா ஆலமில் உள்ள ஆலம் இம்பியான், ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.

முன்னாள் ஹருண் தோட்ட ஆலயமான இது விண்ணை முட்டும் கோபுரங்களையோ கண்ணைப் பறிக்கும் ஜோடனைகளையோ கொண்டிருக்கவில்லை. தோட்டப்புற ஆலயங்களுக்கான அதே சாதாரண தோற்றத்தை இன்றளவும் கொண்டுள்ளது. ஆனால் சிரமத்தில் இருப்போருக்கு உதவ வேண்டும் என்பதில் மட்டும் இவ்வாலயம் குறியாக உள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலயத்தின் சார்பாக பல கட்டங்களில் தாங்கள் உதவி நல்கியுள்ளதாக கூறுகிறார் ஆலயத் தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம்.

கடந்தாண்டு மே மாதம் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் ஏற்பாட்டில் இவ்வட்டார ஏழைகளுக்கு 50 உணவுப் பொருள்கள் வழங்கப்பட்ட வேளையில் எங்களின் பங்காக மேலும் 30 பேருக்கு அத்தகைய உதவிகளை வழங்கினோம் என்றார் அவர்.

தலா 100 வெள்ளி மதிப்பிலான அரிசி, சீனி, கோதுமை, மேகி, சாடின், சமையல் எண்ணெய் உள்ளிட்ட எட்டு விதமான பொருள்கள் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இது தவிர, கடந்த சித்திரை புத்தாண்டின் போது இவ்வட்டாரத்திலுள்ள 20 வசதி குறைந்த குடும்பத்தினருக்கு தலா 150 வெள்ளியை ரொக்கத் தொகையாக வழங்கினோம்.

வசதி குறைந்தவர்களை மையமாக கொண்டு கடந்த ஜூன் மாதம் 27ஆம் தேதி நடத்தப்பட்ட நிகழ்வில் தலா 100 வெள்ளி மதிப்பில் பத்து வகையான பொருள்கள் கொண்ட உணவு பொட்டலங்களை 15 குடும்பங்களுக்கு வழங்கினோம் என அவர் குறிப்பிட்டார்.

இது போன்ற உதவித் திட்டங்களை தாங்கள் தொடர்ந்து மேற்கொள்ளவிருப்பதாக கூறிய அவர், உதவி தேவைப்படுவோர் தங்களை அணுகும்பட்சத்தில் அவர்களுக்கு நிச்சயம் உதவிகள் வழங்கப்படும் என்றார்.

> “ **சிலாங்கூர் அரசின் உதவியால் ஆலயத்திற்கு 20,000 சதுர அடி நிலம்** ”

சிலாங்கூர் அரசின் உதவியால் ஆலயத்திற்கு 20,000 சதுர அடி நிலம் ஹருண் தோட்டத்தில் 1894ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த ஆலயம் மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாக பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட வேண்டிய நிர்பந்தத்திற்கு இலக்கானாலும் இவ்வட்டார இந்துக்களுக்கான முக்கிய வழிபாட்டுத் தலமாகவும் சமூக மையமாகவும் திகழ்வதை ஆலய நிர்வாகத்தினர் தொடர்ந்து உறுதி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 127 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த ஆலயம் பல போராட்டங்களைச் சந்தித்து அதே இடத்தில் இன்றளவும் வீற்றிருப்பதற்கு பக்தர்கள் மற்றும் பக்கத்தான் அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்புமே காரணம் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டில் ஹருண் தோட்டம் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஆலயத்தை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதைய அரசாங்கத்திடம் நாங்கள் முறையிட்ட போது தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றாக வேறு இடங்கள் அடையாளம் காட்டப்பட்டன.

ஆலய நில விவகாரம் இழுபறியாக இருந்த நிலையில் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பக்கத்தான் கூட்டணி வெற்றி பெற்றது. அப்போதைய ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சேவியர் ஜெயக்குமார் மற்றும் கோத்தா ராஜா நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் ஆகியோரின் கவனத்திற்கு இவ்விவகாரம் கொண்டுச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக ஆலயத்திற்கு அதே இடத்தில் இருபதாயிரம் சதுர அடி நிலம் அதிகாரப்பூர்வமாக ஒதுக்கித் தரப்பட்டது.

இந்த ஆலயத்தை இதே நிலையில் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் சொல்ல நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய ஆலயமாக நிர்மாணிக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்நோக்கத்திற்காக கட்டிடக் குழுவை அமைத்து அடுத்தக் கட்ட நகர்வுகளை முன்னேடுக்கவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

பெருந்தொற்று காரணமாக பக்தர்களின் வருகை குறைந்து ஆலயத்தின் வருமானமும் பாதிக்கப்பட்ட போதிலும் தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைப்பதற்கு ஆலய நிலத்தில் ஒரு பகுதியை வாடகைக்கு வழங்கியதன் மூலம் கிடைக்கும் கணிசமான வருமானம் மற்றும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் மூலம் கிடைக்கும் மாநில அரசின் மானியம் மூலம் ஆலயத்தை வழிநடத்துவதோடு சமூகப் பணிகளையும் தாங்கள் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# மோரட்டோரியம் காலத்தில் கூட்டு வட்டி, அபராதக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்

புத்ரா ஜெயா – மக்கள் நலன் மற்றும் பொருளாதார மீட்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மோரட்டோரியம் எனப்படும் வங்கிக் கடனை திரும்பச் செலுத்துவதை தாமதப்படுத்தும் ஆறு மாத கால தவணையின் போது விதிக்கப்படும் கூட்டு வட்டி மற்றும் அபராதக் கட்டணத்தை வங்கிகள் தள்ளுபடி செய்யும் என நிதியமைச்சர் துங்கு டத்தோஸ்ரீ ஸப்ருள் அப்துல் அஜிஸ் கூறியுள்ளார். அண்மையில் வங்கிகளுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் போது இவ்விவகாரம் எழுப்பப்பட்ட நிலையில் கூட்டு வட்டி மற்றும் அபராதக் கட்டணத்தை தள்ளுபடி செய்ய அவை இணக்கம் தெரிவித்ததாக அவர் சொன்னார். மோராட்டோரியம் காலத்தில் வட்டியை அதிகரிப்பது மற்றும் அபராதக் கட்டணம் விதிப்பது போன்ற நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபட்டால் அது குறித்து புகார் செய்யும்படி பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டார். வருமான வேறுபாடின்றி அனைத்து நிலையிலான மக்களுக்கும் ஆறு மாத கால மோரட்டோரியம் சலுகை வழங்கப்படும் தகவலை பிரதமர் டான்ஸ்ரீ மொகிதின் யாசின் நேற்று அறிவித்தார்.

# இந்தியச் சமூகத் தலைவர். தாமான் மேடான் சட்டமன்றத் தொகுதி

அசோகன் தாமான் மேடான் சட்டமன்றத் தொகுதியில் சேவை புரியும் இந்தியச் சமூகத் தலைவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பார்கள், அதற்கு ஏற்ப மக்கள் சேவையில் எனக்கு அதிக ஈடுபாடு, மக்கள் பிரச்சனைகளுக்கு உதவ நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொடர்பும், ஒத்துழைப்பும் மிக அவசியம், அதனால் அவர்களை அடிக்கடி சந்திக்க வேண்டிய நிலை,

மேலும் நான் கெஅடிலானின் தொகுதி நிர்வாக உறுப்பினர்.

இந்தத் தொகுதி அதிகப்படியான மலிவு விலை குடியிருப்புகளைக் கொண்டது என்பதால் ஏழ்மையே இங்குள்ள மக்களின் தலையாய பிரச்சனையாகும் என்றார் அவர். சமூகச் சீர்கேடுகள், தனித்து வாழும் தாய்மார்கள், அடையாளப் பத்திர விவகாரம். வேலையின்மை, பிள்ளைகளின் கல்விக்கான உபகரணங்கள் போன்றதே இங்குள்ள இந்தியர்களின் பெரும் சவாலாகும்.

இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கத் தான் இத்தொகுதி நகராண்மைக் கழக உறுப்பினர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் உதவி மட்டுமின்றி, மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஹி லோய் சான் மற்றும் கணபதிராவின் உதவியையும் பெற்று இங்குள்ள மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப் பாடு படுவதாகக் கூறினார்.

தன் கையே தனக்கு உதவி– வேலையின்மை, பிள்ளைகளின் கல்வி கட்டணம் மற்றும் தனித்து வாழும் தாய்மார்கள் ஏழ்மையிலிருந்து விடுபட அவர்களின் ஓய்வு நேரங்களை மிகப் பயனுள்ளதாக மாற்ற, தையல், பூ மாலைகள் தொடுத்தல், முக அலங்காரம் போன்ற சில தொழில் பயிற்சிகளை சிலாங்கூர் மக்கள் சேவை மையம் வழி வழங்கி வருகிறோம்.

சிலாங்கூர் மக்கள் சேவை மையம் என்பது இம்மாநில இந்தியச் சமூகத் தலைவர் திரு. இராசேந்திரனை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. இதன் வழி சில தொழிற்துறை பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மாநிலம் முழுவதிலும் கட்டங்கட்டுமாக நடத்த உதவுகிறது. இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சியும் இங்கு எற்பாடு செய்திருந்தோம் ஆனால் இப்பொழுதுள்ள நடமாட்டு கட்டுப்பாடுகளால் எங்கள் செயல்பாடுகள் திசை மாறி விட்டன.

அதனால், தற்போது மக்களின் ஏழ்மையைப் போக்க, உணவு கூடை, மருத்துவ உதவிகளைச் செய்கிறோம். எங்களுக்கு மாநில அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஒதுக்கீடுகளிலிருந்து கிடைத்த மானியத்தைக்கொண்டு அதிக வறுமையிலிருக்கும் 126 குடும்பங்களுக்கு உணவு கூடைகளை வழங்கினோம்.

அடையாளப் பத்திர விவகாரத்தை ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் அலுவலகத்தின் உதவியுடன் தீர்க்க வேலைச் செய்கிறோம். அதேபோல் உடல் நலிவுற்ற முதியோர்களுக்குத் தேசியச் சமூக நலத்துறையின் வழி மாதாந்திர நிதி உதவிக்கும் ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

இவ்வேளையில் சமூக தலைவராக நான் செயல்பட உதவியாக உள்ள 15 சமூக சேவைக் குழு உறுப்பினர்களுக்கும், இத்தொகுதி நகராண்மைக்கழக உறுப்பினர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி, மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஹி லோய் சான் மற்றும் கணபதிராவின் உதவிக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

# ஒப்பந்த மருத்துவர்கள் விவகாரம் அமைச்சரவையில் விவாதிக்கப்படும்

## பொறுமை காக்கும்படி மருத்துவர்களுக்கு அமைச்சர் கோரிக்கை

புத்ரா ஜெயா – நிரந்தரமாக பணியமர்த்தப்படாமலிருக்கும் ஒப்பந்த மருத்துவ அதிகாரிகளின் விவகாரம் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்படும் என்று சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஆடாம் பாபா கூறினார். கடந்த மே மாதம் 31ஆம் தேதி வரை மூன்று முக்கிய பிரிவுகளில் 35,216 மருத்துவ அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதாக அவர் சொன்னார். யுடி41 பிரிவைச் சேர்ந்த 23,077 மருத்துவ அதிகாரிகள், யுஜி41 பிரிவைச் சேர்ந்த 5,000 பல் மருத்துவ அதிகாரிகள், யுஎப்41 பிரிவைச் சேர்ந்த 7,139 மருந்தக அதிகாரிகள் ஆகியோரே அவர்களாவர் என்று அமைச்சர் கூறினார். ஒப்பந்த அடிப்படையில் பணியில் இருக்கும் மருத்துவர்கள் பொறுமை காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்விவகாரம் தொடர்பான அறிக்கை தயாராகி விட்டதோடு விரைவில் அது அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார். தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். ஒப்பந்த மருத்துவர்களுக்கான சம்பளத் திட்டத்தை சுகாதார அமைச்சு மறுஆய்வு செய்துள்ளதாகவும் இதன் வழி நிரந்தர மருத்துவ அதிகாரிகளின் சம்பளத்திற்கு ஏறக்குறைய இணையான சம்பளத்தை ஒப்பந்த மருத்துவ அதிகாரிகளும் பெறுவர் என்றும் அமைச்சர் ஆடாம் பாபா முன்னதாக கூறியிருந்தார்.


நாடு முழுவதும் உள்ள 23,000 ஒப்பந்த மருத்துவர்கள் ஜூலை 26 ஆம் தேதி நாடு முழுவதும் மறியலில் ஈடுபடவுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

தாங்கள் நிரந்தர மருத்துவர்களாக நியமனம் பெறுவதற்கு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்ட நிலையில் அம்மருத்துவர்கள் இம்முடிவை எடுத்துள்ளனர்.



# மாமன்னரின் உத்தரவை ஏற்று ஆகஸ்டு முதல் தேதிக்கு முன்னதாக நாடாளுமன்றம் கூட்டப்படும்

கோலாலம்பூர் - நடப்பிலுள்ள சட்டங்களின் அடிப்படையில் நாடாளுமன்றத்தை ஆகஸ்டு மாதம் முதல் தேதிக்கு முன்னதாக கூட்டுவதற்கு மேலவை உறுப்பினர் செனட்டர் டான்ஸ்ரீ டாக்டர் ராய்ஸ் யாத்திமும் மக்களவை சபாநாயகர் டத்தோ அஸார் அஸிசான் ஹருணும் பிரதமரிடம் பரிந்துரை செய்வர்.
மாட்சிமை தங்கிய பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா அவர்களுடன் அவ்விருவரும் நடத்திய சந்திப்பை தொடர்ந்து டான்ஸ்ரீ மொகிடின் யாசினிடம் இந்த பரிந்துரை முன்வைக்கப்படவுள்ளது.
மாட்சிமை தங்கிய பேரரசரின் உத்தரவுக்கேற்ப நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நடத்துவதில் தங்களுக்கு உள்ள கடப்பாட்டையும் முழு ஈடுபாட்டையும் மாமன்னரிடம் மேலவைத் தலைவரும் மக்களவைத் தலைவரும் வெளிப்படுத்தியுள்ளனர் என மலேசிய நாடாளுமன்றம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது.
நாடாளுமன்றம் வரும் ஆகஸ்டு முதல் தேதிக்கு முன்னதாக கூட்டப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை மாமன்னர் அந்த சந்திப்பின் போது வெளிப்படுத்தியதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.
இந்த சந்திப்பின் போது மேலவை மற்றும் மக்களவை துணை சபாநாயகர்களும் உடனிருந்தனர்.






## மாற்றுத் திறனாளிகளுக்கான 500 வெள்ளி உதவித் தொகைக்கு 4,264 பேர் விண்ணப்பம்

ஷா ஆலம் - மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 500 வெள்ளி சிறப்பு உதவித் தொகைக்கு 4,264 விண்ணப்பங்களை யாவாஸ் எனப்படும் சிலாங்கூர் மரபு மைந்தர் வாரியம் பெற்றுள்ளது.
ஜூலை மாதம் முதல் தேதி முதல் இதுவரை இந்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக யாவாஸ் தலைமை நிர்வாகி கான் பெய் நீய் கூறினார். இந்த திட்டத்திற்கு தாங்கள் நிர்ணயித்திருந்த 1,200 விண்ணப்பங்களையும் தாண்டி நான்காயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக கூறிய அவர், அந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்படுவதாகச் சொன்னார். யார் முழுமையான ஆவணங்களை முதலில் அனுப்பினார்கள் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மாநிலத்தின் சில பகுதிகளில் கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்டுள்ளதால் பெரும்பாலோர் ஆவணங்களை முழுமையாக அனுப்ப இயலாத நிலையில் உள்ளனர் என்றார் அவர். நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட கூடுதலாக விண்ணப்பங்கள் கிடைத்துள்ள போதிலும் இம்மாத இறுதி வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பம் செய்வதற்கான கால அவகாசம் முடிந்தப் பின்னர் தகுதி உள்ளவர்களுக்கு நிதி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.
இந்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை வாரந்தோறும் நடைபெறும். அவசியம் ஏற்படும் பட்சத்தில் அரசிடம் கூடுதல் மானியம் கோரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பின் வாயிலாக மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க 6 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவது தொடர்பான அறிவிப்பை மந்திரி புசார் கடந்த மாதம் 9ஆம் தேதி வெளியிட்டிருந்தார்.

## சேம நிதியிலிருந்து 5,000 வெள்ளி வரை மீட்க அரசாங்கம் அனுமதி

ஷா ஆலம் - நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்ட 1 கோடியே 26 லட்சம் ஊழியர் சேம நிதி வாரிய (இ.பி.எஃப்.) உறுப்பினர்கள் தங்கள் சேமிப்பிலிருந்து 5,000 வெள்ளி வரை மீட்க அனுமதிக்கப்படுவர். ஐ-சித்ரா திட்டத்தின் வாயிலாக இந்த பண மீட்புக்கான அனுமதி வழங்கப்படுவதாக பிரதமர் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் கூறினார்.
உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையை பொறுத்து மாதம் 1,000 வெள்ளி வீதம் ஐந்து மாதங்களுக்கு பணத்தை மீட்கலாம் எனவும் அவர் சொன்னார். வரும் ஜூலை 16ஆம் தேதி தொடங்கி http://icitra.kwsp.gov.my எனும் அகப்பக்கம் வாயிலாக இதற்கான விண்ணப்பங்களைச் செய்யலாம். முதல் கட்டத் தொகை வரும் ஆகஸ்டு மாதம் உறுப்பினர்களின் வங்கி கணக்கில் சேர்க்கப்படும். தங்கள் அன்றாட தேவைக்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்த ஐ-சித்ரா திட்டத்தின் கீழ் 3,000 கோடி வெள்ளி மக்களுக்கு வழங்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.
இன்று மக்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மீட்சி உதவித் தொகுப்பை வெளியிட்ட போது பிரதமர் இவ்வாறு கூறினார்.
இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இதர உதவிகள் வருமாறு-
கோவிட்-19 சிறப்பு உதவி ஆண்டு இறுதி வரை வழங்கப்படும்
அ). பரம ஏழைகளுக்கு வெ.1.300/ திருமணமாகாதவர்களுக்கு வெ.500
ஆ).பி40 குடும்பங்களுக்கு வெ.300/ திருமணமாகாதவர்களுக்கு வெ. 200
இ).எம்40 குடும்பங்களுக்கு வெ.250/ திருமணமாகாதவர்களுக்கு வெ. 100
இ.பி.எஃப். மற்றும் சொக்சோ தரவுகளின் அடிப்டையில் 2021இல் வேலை இழந்தவர்களுக்கு 500 வெள்ளி உதவித் தொகை
சொக்சோ சந்தாதாரர் அல்லாதோருக்கு வேலை தேடும் அலவன்சாக வெ. 300 வழங்கப்படும்
உணவுக் கூடை திட்டத்திற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 300,000 வெள்ளி ஒதுக்கீடு
பூர்வக்குடியினருக்கான உணவுக் கூடை திட்டத்திற்கு 1 கோடி வெள்ளி ஒதுக்கீடு தங்குமிடம் இல்லாதவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு சாரா அமைப்புகளின் வாயிலாக உதவ வெ.1.5 கோடி ஒதுக்கீடு மாதம் ஒன்றுக்கு கூடுதல் பட்சம் 900 கிலோவாட் மணி நேர மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு 5 முதல் 40 விழுக்காடு வரை மின்சார கட்டணக் கழிவு
இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை தினசரி ஒரு கிகாபைட் இலவச இணைய தரவு விநியோகம்

## சிலாங்கூரிலுள்ள சி.ஏ.சி. மையங்களுக்கு 7,000 சுய பரிசோதனை கருவிகள் விநியோகம்

ஷா ஆலம் - சிலாங்கூர் மாநிலத்திலுள்ள கோவிட்-19 மதிப்பீட்டு மையங்களுக்கு வீட்டிலிருந்து சுயமாக கோவிட்-19 சோதனையை மேற்கொள்ள உதவக்கூடிய ஏழாயிரம் உபகரணங்கள் வழங்கப்படும்.
வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நோயாளிகள் தங்கள் உடல்நிலை குறித்து அறிந்து கொள்ள இந்த கருவிகள் பெரிதும் துணை புரியும் என்று சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.
மெலாவத்தி அரங்கில் உள்ள சுமார் ஆயிரம் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நிலை நோயாளிகளுக்கு ஆக்சிமீட்டர் உள்ளிட்ட சுய பரிசோதனை சாதனங்கள் அடங்கிய பெட்டிகள் வழங்கப்பட்டன என்றார் அவர்.
மருத்துவர்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏதுவாக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகள் தங்கள் உடநிலை குறித்த தகவல்களை தினசரி இரு முறை மைசெஜாத்ரா செயலி வழி தெரிவிக்க வேண்டும். என்று அவர் சொன்னார்.
இரத்தத்தில் உள்ள ஆக்சிஜன் அளவை சோதனையிடுவதன் மூலம் நோயாளிகளின் உடல் நிலையை மதிப்பீடு செய்யும் மருத்துவர்கள், அவர்கள் தொடர்ந்து வீட்டிலியே தனிமைப்படுத்தப்படுவதா? அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதா? என்பதை முடிவு செய்வர் என்றார்.

# மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாநாட்டு மையம்

## கண்ட முதல் கல்விக் கூடம்- பாகம் 2



திரு சுப்பையா
பள்ளி வாரியத்தின் பொருளாளர்

இன்று 100 ஆண்டுகளை தாண்டி ஒரு பள்ளியோ அல்லது ஆலயமோ, இந்நாட்டில் பெயர் சொல்லிக்கொண்டு இருக்கிறது என்றால், அதற்கென பல சிறப்புகள் இருக்கும், முக்கியமாக அதற்கு பின்னல் பல மாமனிதர்களின் உழைப்பும், தியாகங்களும் இருக்கும், அதுவே ஒரு மாநில தலைநகரில் அல்லது நாட்டின் தலைநகரில் வீட்டிறுக்க இன்னும் பல சிறப்பு காரணங்களும் சிறப்பானவர்களின் உழைப்பு இருக்கும், அப்படிப்பட்ட சாதனைகளுக்கு பின்னால் இருப்பவர்கள் மாமனிதர்கள் என்று புகழ்ப்பாட பட வேண்டியவர்கள் ஆனால் என்ன துரதிஸ்டம் மற்றவர்களின் சாதனையை கண்டு சகிக்க முடியாத ஒரு கூட்டம், சாதனையாளர்களின் மீது, அவதுறுகளை அள்ளி வீசதவறுவதில்லை, தாங்களை வல்லவர்களை என காட்டிக்கொள்ள மல்லாந்து படுத்துக்கொண்டு வானை நோக்கி எச்சில் உமிலும் போக்கு கேவலமானது.

### சாதனைகள்

மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் கட்டுமானத்தின் வெற்றி, பக்காத்தானை தேர்ந்தெடுத்த மக்களின் வெற்றியாகும், நம் தேவை என்ன? அரசிடம் மக்கள் எதிர்ப்பார்த்தது என்ன என்பதனை அரசுக்கு உணர்த்த பக்காத்தானை இந்தியர்கள் பயன் படுத்திக்கொண்டனர் அது இந்தியர்களின் புதிய அணுகு முறைக்கு கிடைத்த வெற்றி. அதுவே எதிர்கால பாணியாக, நமது கொள்கையாக கொள்ள வேண்டும்.

1. முழுக்க – முழுக்க இந்திய குத்தகையாளரால், குறைந்த விலையில், குறுகிய காலத்தில், தரமான வேலைபாடுகளுடன், பல வசதிகளுடன் கட்டப்பட்டது. ஒரு இந்திய குத்தகையாளர் சுய நலமின்றி, பெரிய லாபம் கருதாமல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே தமிழ்ப்பள்ளியை வெற்றிகரமாகக் கட்டிமுடித்துக் கொடுத்ததன் பயன்,

**“மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி கட்டிய நிறைவு விழாவுக்கு பின், மூன்றே வாரத்தில் இந்தியச் சமுதாயத்திற்கு 10 கோடி வெள்ளிகளை வெகுமதியாக ஈட்டி தந்தது”.**

நாடு முழுவதும் உள்ள தமிழ்ப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கம், தலைமை ஆசிரியர், தமிழ்ப்பள்ளி வாரியங்கள் விழிப்படைந்தன வீரியமுடன் செயல்பட தொடங்கின. பாரிசான் ஆட்சியில் ஆண்டாண்டு காலமாக மகஜர் கொடுத்தே அலுத்தபோன சமுதாயத்திற்கு, என்ன? எது வேண்டும்? என அரசுக்கு கட்டளையிடவும், தோட்ட மக்களுக்கு கற்றுதந்தது மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியே.

### முதல் வாரத்திலேயே, 10 கோடி வெள்ளி

நமது பள்ளி திறப்பு விழா கண்ட முதல் வாரத்திலேயே, பிரதமர் அறிவித்த 10 கோடி வெள்ளி மானியத்தை எடுத்துக்கொண்டு கெடா மாநில தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளைச் சந்தித்த மஇகாவின் அன்றைய தேசிய தலைவர் டத்தோ ஸ்ரீ பழனிவேல், இந்திய குத்தகையாளர்களைக் கொண்டு பள்ளி நிர்வாகங்களே பள்ளிகளை மேம்படுத்த அனுமதிக்க வேண்டி, அவரை கேட்டுக்கொண்டன. அம்மாதிரியான கோரிக்கைகள் சிலாங்கூரிலும் வலுப்பெற்றது. தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளுக்கு இது நன்றாகத் தெரியும்.

**[ அரசியல்வாதிகள் , கல்வி இலாக்கா அதிகரிகளின் நிபந்தனைகளை ஏற்று தலையாட்டிக் கொண்டிருந்த நிலை மாறி, தமிழ்ப்பள்ளி நிர்வாகங்கள் அரசியல்வாதிகளுக்கும் , கல்வி இலாக்காவுக்கும் கட்டளை இடும் கௌரவம் இப்பள்ளியால் நமக்கு கிட்டியது. ]**

**பள்ளிகளின் நிர்மாணிப்பு , சீரமைப்பு மானியங்கள் இந்திய குத்தகையார்களுக்கு என்பதை வரவேற்கிறோம்.**

**மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி இந்தியர்களின் ஜீவகாவியம்.**

### நம்மாலும் முடியும் நம்பிக்கை பிறந்தது.

கோளாறுகளுடன் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களை, ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பற்பல பிரச்சனைகளை எதிர்நோக்கிய கலாச்சாரத்துக்கு விடை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றிக்கு பின் தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளிடம் ஏற்பட மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றிகரமான கட்டுமானமே காரணம், மக்கள் துணிவுடைய ஆட்சி மாற்றமே காரணம்.

**{ 50 ஆண்டுகளாக தோட்ட பாட்டாளிகள் உதிரத்தை உறிஞ்சியவர்கள் தமிழ்ப்பள்ளிக்கு நிலத்தை ஒதுக்க மறுத்தவர்கள், அதே நிலத்தை பொன் தட்டில் வைத்து வழங்கியது எப்படி? }**

மிட்லண்ஸ் தோட்டத்தின் பெரும்பகுதி நிலத்தை மேம்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட பி.கே.என்.எஸ் என்ற சிலாங்கூர் மாநில மேம்பாட்டு கழகம், அதே தோட்டத்திலிருத்த பள்ளிக்கு, தோட்டபாட்டாளிகளின் மறுகுடியேற்றமான செக்சன் 7லில் நிலம் ஒதுக்க மறுத்து விட்டது. அந்த தோட்டத்தின் வேறொரு பகுதியை வாங்கிய ஐ.சீடி நிறுவனம் தமிழ்ப்பள்ளிக்கு எதாவது ஒரு இடத்தில் நிலம் ஒதுக்கித்தர நிர்பந்திக்கப் பட்டது.

**இன்று சிலாங்கூரில் மட்டுமல்ல நாட்டில் பல புதிய பள்ளிகள் தோன்ற மிட்லண்ஸ் தமிழ்ப்பள்ளியின் வெற்றியே மூலக்காரணம். அதன்படி, கிள்ளான் மாவட்டத்தில் சொந்தோசா தமிழ்ப்பள்ளி, பெட்டாலிங் மாவட்டத்தில் மாணிக்கவாசம் தமிழ்ப்பள்ளி, உலு லங்காட் மாவட்டத்தில் பண்டார் மக்கோத்தா தமிழ்ப்பள்ளி, சிப்பாங் மாவட்டத்தில் சுங்கை பீலேக் தமிழ்ப்பள்ளி தோன்ற புள்ளியார் சுழியாக அமைந்தது மிட்லண்ட் தமிழ்ப்பள்ளியின் சாதனையே!**

மிட்லண்ஸ் ஒரு தமிழ்ப்பள்ளியாக மட்டும் இல்லாமல் சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் சர்வ கலாசாலையாகவும் உருவெடுத்துள்ளது நமது நோக்கம் வெற்றியடைந்தது,

**- இது நம் பிள்ளைகளின், நாளைய சமுதாயத்தின் இலட்சியத்துக்கு, பல நல்ல உள்ளங்களின் எதிர்கால திட்டங்களுக்கு, முயற்சிக்கு ஊக்கமளிக்கும ஒரு உன்னத காவியமாக அமைந்தது மிட்லண்ட் தமிழ்ப்பள்ளி.**

**- சிலாங்கூரில் 2008ம் ஆண்டு மக்கள் எடுத்த முடிவு, ஒரு பொறுப்பு மிக்க ஆட்சியை, ஒரு நிர்வாகத்தை மாநிலத்துக்கு வழங்கியது.**

**- மக்களுக்கு இன்று ஒரு மாற்று தேர்வாக பக்காத்தான்**

**அரசுகள் அமைந்துள்ளன.**

**- மிட்லண்ஸ் தமிழ்ப்பள்ளி கட்டுமானத்தில் இந்தியர் அடைந்த வெற்றி, கட்டட கட்டுமானத்தில் மட்டுமன்றி, இத்தேசத்தையே மறுநிர்மாணிப்பு செய்யும் ஆற்றல், செயல் திறன் நமக்குண்டு என்பதை காட்டும் ஒரு மார்க்கமே.**

இந்தியர்கள் இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு உணர்த்த முற்பட்டது, ''ஆட்சியை மாற்ற மட்டுமல்ல, நல்ல ஆட்சியை வழங்கவும் நம்மால் முடியும்,'' நமது கோரிக்கைகளை ஏற்று அங்கீகரிக்கும் எவருடனும் சேர்ந்து வேலை செய்வோம் என்பதனை உணத்தினோம். அதன் பயன்,

**நாடு சுதந்திரத்திற்கு பின் வேகமாக சரிந்துவந்த தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை, இப்பொழுது வளர தொடங்கி விட்டது. அது மிட்லண்சின் வெற்றி மட்டுமல்ல இந்நாட்டு இந்தியர்களின், தமிழ்ப்பள்ளிகளின், தாய்மொழிக்கல்வியின் வெற்றி!**



தமிழ்ப்பள்ளியின் முதல் மாணவர் தங்கும் விடுதி

# சிலாங்கூர்-கோலாலம்பூரில் பி.கே.பி.டி. அமல் பொது மக்கள் கடைபிடிக்க வேண்டிய எஸ்.ஓ.பி. விதிமுறைகள்

ஷா ஆலம் – கோவிட்-19 பெருந்தொற்று தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூரின் பல்வேறு துணை மாவட்டங்களில் (முக்கிம்) கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை (பி.கே.பி.டி.PKPD) அரசாங்கம் அமல்படுத்தியுள்ளது.

இந்த நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை இம்மாதம் 3 ஆம் தேதி தொடங்கி இரு வாரங்களுக்கு அமலில் இருக்கும். இக்காலக் கட்டத்தில் பி.கே.பி.டி. அமல் செய்யப்பட்ட பகுதிகளில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை தேசிய பாதுகாப்பு மன்றம் வெளியிட்டுள்ளது. அவை பின்வருமாறு-

* *பி.கே.பி.டி. அமல் செய்யப்பட்ட அனைத்து துணை மாவட்டங்களிலும் உள்ள சாலைகளில் போலீசார் சாலைத் தடுப்புகளை ஏற்படுத்தி சோதனை மேற்கொள்வர்.*

* *இப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். பொருள்கள் வாங்க வீட்டிற்கு ஒருவர் மட்டும் பத்து கிலோமீட்டர் சுற்றளவு பகுதி வரை செல்ல முடியும்.*

* *உணவகங்கள், கடைகள், வாகனம் மூலம் உணவு விற்பனை, சாலையோரக் கடைகள், அங்காடிக் கடைகள் உள்ளிட்ட வர்த்தகங்கள் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படும்.*

* *உணவகங்களில் அமர்ந்து உணவு உண்ண அனுமதிக்கப் படாது. உணவை வாங்கச் செல்வது, உணவு பட்டுவாடா சேவை, டிரைவ் ட்ரு எனப்படும் வாகனங்களிலிருந்து உணவு வாங்கும் நடைமுறை ஆகியவை மட்டும் அனுமதிக்கப்படும்.*

* *மளிகைக் கடைகள், பல்நோக்கு கடைகள், அன்றாட அத்தியாவசியப் பொருள் விற்பனை நிலையங்கள் காலை 8,00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப் படுகிறது.*

* *மருத்துவமனைகள், கிளினிக்குகள், மருத்துவ ஆய்வகங்கள் லைசென்சில் வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் 24 மணி நேரம் செயல் படலாம்.*

* *பெட்ரோல் நிலையங்கள் அதிகாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படும். எனினும் நெடுஞ்சாலைகளில் உள்ள நிலையங்கள் 24 மணி நேரம் செயல்பட அனுமதி உண்டு.*

* *பாசார் போராங் எனப்படும் மொத்த காய்கறிச் சந்தை நள்ளிரவு 12.00 மணி முதல் அதிகாலை 6.00 மணி வரை செயல்படும்.*

* *பொதுச் சந்தைகள், நிரந்தர பாசார் தானி, மைபார்ம் விநியோக மையம் ஆகியவை அதிகாலை 6.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப் படுகிறது.*

16ஆம் பக்கம் தொடரும்...

# என்.ஜி.ஓ.-வர்த்தகத் துறையினர் தடுப்பூசி கொள்முதல் செய்ய அனுப்பீர்

## செந்தோசா உறுப்பினர் குணராஜ் வலியுறுத்து




ஷா ஆலம் - பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு ஏதுவாக வர்த்தகத் துறையினர், அரசு சாரா அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் கோவிட்-19 தடுப்பூசிகளை சொந்தமாக கொள்முதல் செய்வதற்கு அனுமதிக்கும்படி அரசாங்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு உதவும் நோக்கில் சொந்தமாக தடுப்பூசிகளை வாங்குவதற்கு பல தரப்பினர் தயாராக உள்ளதாக செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

இவ்விவகாரம் மீது அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

இத்தகைய நடவடிக்கையின் வாயிலாக நோய்த் தொற்றிலிருந்து மக்களை விடுவிக்கும் முயற்சிக்கு அத்தரப்பினர் மறைமுக பங்கினை ஆற்றுகின்றனர் என்றார் அவர்.

தடுப்பூசித் திட்டத்தை விரைந்து கொள்வதில் அரசாங்கம் அடைந்த தோல்வி காரணமாக மக்கள் உயிருக்கும் வாழ்வாதாரத்திற்கும் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்று அறிக்கை ஒன்றில் அவர் சொன்னார்.

தடுப்பூசியை விரைவாக பெற வேண்டுமானால் சொந்த செலவில் தனியார் துறையை அணுகி தடுப்பூசி பெறுங்கள் என்ற தேசிய கோவிட்-19 தடுப்பூசி திட்டத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சர் கைரி ஜமாலுடினின் அறிக்கையை குணராஜ் கடுமையாகச் சாடினார்.

## மெந்தாரி கோர்ட் பகுதியில் கோவிட்-19 பரிசோதனை முடிந்தது

# தடுப்பூசி பணி தொடக்கம்



ஷா ஆலம் — கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (பி.கே.பி.டி.) அமல்படுத்தப்பட்ட பெட்டாலிங் ஜெயா, மெந்தாரி கோர்ட் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள 9,007 பேருக்கு கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளும் பணி முடிவுக்கு வந்துள்ளது.

அப்பகுதியில் மீண்டும் கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்படாமலிருப்பதை உறுதி செய்வதற்கும் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏதுவாக தடுப்பூசி செலுத்தும் பணி அங்கு கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பி.கே.பி.டி. அமல்படுத்தப்பட்டுள்ள மெந்தாரி கோர்ட் பகுதியில் நேற்று நான் ஆய்வு மேற்கொண்டேன். இப்பகுதியில் பி.கே.பி.டி. அமலாக்கம் மிகவும் சவால்மிக்கதாக உள்ளது. காரணம் அங்கு வசிக்கும் சுமார் 17,000 பேருக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டியுள்ளது என்றார் அவர். கடந்த முதல் தேதி தொடங்கி இந்த குடியிருப்பு பகுதியில் தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளப்படுவதாக கூறிய அவர், பி.கே.பி.டி. அமல்படுத்தப்பட்ட பகுதியில் தடுப்பூசி செலுத்தும் இயக்கம் மேற்கொள்ளப்டுவது இதுவே முதன் முறையாகும் என்றார்.

இதே போன்ற அணுகுமுறை நடப்புச் சூழலைப் பொறுத்து வேறு இடங்களிலும் அமல்படுத்தப்படும் என தாங்கள் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுமார் 500 பேருக்கு கோவிட்-19 நோய்த் தொற்று கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த குடியிருப்பு பகுதியில் பி.கே. பி.டி. அமல் செய்யப்பட்டது. இப்பகுதியில் முதல் கட்டமாக நேற்று முன்தினம் 1,553 பேருக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்பட்டது.

## உணவுக் கூடை திட்டத்தில் யாரையும் புறக்கணிக்கக்கூடாது



ஷா ஆலம் — உணவுக் கூடை திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50,000 வெள்ளி மானியம் பூர்வக் குடியினர் உள்பட சரியான தரப்பினரை முறையாக சென்றடைவதை உறுதி செய்யும்படி மாநிலத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

இந்த உதவித் திட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் மீது மட்டும் கவனம் செலுத்தி சமூகத்தின் மற்றப் பிரிவினரை கைவிட வேண்டாம் என்று சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பூர்வக்குடியினர் விவகாரங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் வலியுறுத்தினார்.

பூர்வக்குடியினர் உள்ள தொகுதிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் அச்சமூகத்திற்கு தேவையான உதவிகள் முறையாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் சொன்னார்.

மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு வாயிலாக பலன் பெறுவதில் பூர்வக்குடியினர் தனித்து விடப்படப்படக் கூடாது என்றார் அவர்.

கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பின் கீழ் உணவுக் கூடைத் திட்டத்திற்காக மாநிலத்திலுள்ள அனைத்து 56 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் கூடுதலாக ஐம்பதாயிரம் வழங்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த 9ஆம் தேதி அறிவித்தார்.

## கோவிட்-19- அதிகமான முன்களப் பணியாளர்கள் கடுமையான

### மன அழுத்தப் பிரச்னையால் பாதிப்பு

ஷா ஆலம் - கோவிட்-19 நோய்த் தொற்று காலத்தில் ஏற்பட்ட பணிச் சுமை காரணமாக 893 சுகாதாரப் பணியாளர்களில் 39.1 விழுக்காட்டினர் கடுமையான மன அழுத்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய மன அழுத்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டவர்களில் சுற்றுச்சூழல் சுகாதார அதிகாரிகள் மற்றும் ஆய்வகப் பணியாளர்கள் ஆகியோரும் அடங்குவர் என்று சுகாதார அமைச்சின் தலைமை இயக்குநர் டான்ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லா கூறினார்.

நீண்ட நாட்களுக்கு 100 விழுக்காடு முழு ஈடுபாட்டுடன் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம் காரணமாக அவர்களுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மருந்தக அதிகாரிகள் மற்றும் மாவட்ட சுகாதார நிலையங்களில் உள்ள பணியாளர்களில் 53.8 விழுக்காட்டினர் மத்தியில் சுய மன அழுத்தப் பிரச்னை அதிகம் காணப்படுவது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

கீழ்க்கண்ட காரணங்களால் சுகாதாரப் பணியாளர்கள் கடும் மன அழுத்தப் பிரச்னையை எதிர்நோக்குவதாக அந்த ஆய்வு கூறுகிறது.

1. பணியிடங்களில் மனோவியல் ரீதியிலான ஆதரவு போதுமான அளவு இல்லாதது

2. கடுமையான வேலைப் பளு

3. முடிவின்றி தொடரும் கோவிட்-19 நோய்த் தொற்றின் பாதிப்பு

4. அடிக்கடி மாற்றப்படும் எஸ்.ஓ.பி. எனப்படும் நிர்வாக நடைமுறைகளுக்கு தங்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தம்

5. வேலை திட்டமிடலில் ஏற்படும் இடையூறு

6. வேலை மற்றும் குடும்பத்தை சரிசமமாக கவனிக்க முடியாத இக்கட்டான நிலை.

# இஸ்மாயில் சப்ரி துணைப் பிரதமராக நியமனம் ஹிஷாமுடின் மூத்த அமைச்சரானார்

கோலாலம்பூர் — டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் நாட்டின் துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்புக்கான மூத்த அமைச்சர் பதவியையும் அவர் தொடர்ந்து வகித்து வருவார். டத்தோஸ்ரீ ஹிஷாமுடின் துன் ஹூசேன் வெளியுறவு துறைக்கான மூத்த



அமைச்சராக பதவி உயர்வு பெற்றுள்ளதோடு இஸ்மாயில் சப்ரி வகித்து வந்த நோய்த் தொற்று பாதுகாப்பு பிரிவுக்கும் தலைமையேற்பார். பிரதமர் துறை இன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்விபரங்கள் இடம் பெற்றுள்ளன. தேசிய மீட்சித் திட்டத்தின் அமலாக்கத்திலும் ஹிஷாமுடின் தனக்கு துணையாகச் செயல்பட பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு நியமனங்களும் மாட்சிமை தங்கிய மாமன்னரின் மேலான கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டதோடு உடனடியாகவும் அமலுக்கு வருவதாக அந்த அறிக்கை மேலும் கூறியது.

# சிலாங்கூரிலுள்ள 34 துணை மாவட்டங்களில் சனிக்கிழமை தொடங்கி பி.கே.பி.டி. அமல்




ஷா ஆலம் — சிலாங்கூரிலுள்ள எட்டு மாவட்டங்களில் உள்ள 34 முக்கிம்களில் (துணை மாவட்டங்கள்) கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை வரும் சனிக்கிழமை தொடங்கி அமல்படுத்தப்படும்.

கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான இந்த ஆணை 14 நாட்களுக்கு அமலில் இருக்கும் என்று பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

இந்த இரு வார காலத்தில் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த இயலாவிட்டால் அந்த ஆணை மேலும் இரு வாரங்களுக்கு நீட்டிக்கப்படும் என அவர் சொன்னார்.

கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல் செய்யப்பட்ட முக்கிம்கள் வருமாறு-

பெட்டாலிங் மாவட்டம் — பெட்டாலிங், சுங்கை பூலோ, புக்கிட் ராஜா

உலு லங்காட் — உலு லங்காட், அம்பாங், செராஸ், காஜாங், செமினி, பெரேனாங்

சிப்பாங்- டெங்கில், லாபு, சிப்பாங்

கோம்பாக்- பத்து, ரவாங், ஸ்தாப்பாக், உலு கிளாங், குவாங்

கோல லங்காட்- தஞ்சோங் 12(1), தஞ்சோங் 12(2), தொலுக் பங்ளிமா காராங், மோரிப், பண்டார் ஜுக்ரா, பத்து

கிள்ளான்- காப்பார், கிள்ளான்

கோல சிலாங்கூர் — ஈஜோக், பெஸ்தாரி ஜெயா, ஜெராம்

உலு சிலாங்கூர்- செரண்டா, ராசா, உலுயாம், பத்தாங் காலி

சிலாங்கூரில் தினசரி 1,800 முதல் 2,000 கோவிட்-19 சம்பவங்கள் வரை பதிவாவதாக இஸ்மாயில் சப்ரி அறிக்கை ஒன்றில் கூறினார். சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூரில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 100,000 பேருக்கு 12.1 பேர் என்ற அளவில் கோவிட்-19 சம்பவங்கள் பதிவாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

14ஆம் பக்கம் தொடர்ச்சி...

* *விளையாட்டு, சமூக, கலாசார மற்றும் சமய நிகழ்வுகளை நடத்த அனுமதி கிடையாது.*
* *டாக்சி மற்றும் கிராப் வாடகை கார்களில் ஓட்டுநர் உள்பட இருவர் மட்டும் பயணிக்க முடியும்.*
* *ஆபத்து அவசர வேளைகளில் வெளியில் செல்வோர் அல்லது போலீஸ் அனுமதி உள்ளவர்கள் தவிர்த்து மற்றவர்கள் இரவு 8.00 மணிக்குப் பிறகு வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதி கிடையாது.*
* *அத்தியாவசிய சேவையில் உள்ளவர்கள் அல்லது அதிகாரப்பூர்வ அரசாங்கப் பணிகளை மேற்கொள்வோருக்கு மட்டுமே வேலை செய்ய அனுமதி உண்டு. அவர்கள் முதலாளியிடமிருந்து அதிகாரப்பூர்வ கடிதத்தைப் பெற்றிருக்க வேண்டும்.*
* *அத்தியாவசியத் துறைகள் தவிர்த்து இதர துறைகளை சேர்ந்தவர்கள் வீட்டை விட்டு வெளியேறவோ வேலைக்குச் செல்லவோ அனுமதி கிடையாது.*
* *முதலாளிகள் எஸ்.ஓ.பி. விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் என்பதோடு தங்கள் பணியாளர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்க வேண்டும்.*
* *தடுப்பூசி செலுத்துவதற்காக மாநில அல்லது மாவட்ட எல்லைகளைக் கடக்க அனுமதி உண்டு. இதற்கு ஆதாரமாக மைசெஜாத்ரா செயலியில் உள்ள முன்பதிவு தொடர்பான தகவல்களை சாலைத் தடுப்பில் காட்ட வேண்டும்.*
* *அத்தியாவசிய மற்றும் அனுமதிக்கப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக மையங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமே முன்பு வழங்கப்பட்ட அனைத்துலக வாணிக அமைச்சின் அனுமதி கடிதத்தைப் பயன்படுத்த முடியும்.*

**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412